**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.** 468 **நாள்:** 12.09.2026

**சொத்து உரிமையாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்குச் செலுத்த வேண்டிய நிலுவை மற்றும் நடப்பு சொத்துவரியினை இம்மாத இறுதிக்குள் (30.09.2026க்குள்) செலுத்தி அத்தியாவசிய சேவைப்பணிகளுக்கு நல் ஒத்துழைப்பு வழங்கிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

**மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி எஸ் சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் பிரதான வரி வருவாயாக சொத்துவரி உள்ளது. இதன் மூலமே, சென்னை மாநகருக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்புகள், திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், தெரு விளக்குகள், பூங்காக்கள், சாலைகள் பராமரித்தல், பொது சுகாதாரம், நோய்த் தடுப்புப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் சொத்துவரி செலுத்தும் மொத்தம் உள்ள 14,15,771 சொத்து உரிமையாளர்களில் இதுவரை 8,12,539 எண்ணிக்கையிலான சொத்து உரிமையாளர்கள் நிலுவையின்றி சொத்துவரி செலுத்தியுள்ளனர். மீதமுள்ள 6,03,232 சொத்து உரிமையாளர்களிடமிருந்து சொத்து வரி நிலுவை மற்றும் நடப்புத் தொகையாக ரூ. 847.80 கோடி செலுத்தப்பட வேண்டியுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2023, விதி, 268 (1) (a)-ல் சொத்து உரிமையாளர்கள், ஒவ்வொரு அரையாண்டிற்கான தங்களது சொத்து வரியை அந்தந்த அரையாண்டின் இறுதிக்குள் செலுத்தப்பட வேண்டும். தவறும் பட்சத்தில், விதி 3ன்படி, நிலுவையில் உள்ள சொத்துவரி மீது அடுத்துவரும் அரையாண்டு முதல் தனிவட்டி விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே, சொத்து உரிமையாளர்கள் தாங்கள் செலுத்து வேண்டிய நடப்பு மற்றும் நிலுவையில் உள்ள சொத்து வரியினை செப்டம்பர் மாத இறுதிக்குள் (30.09.2026க்குள்) செலுத்திட வேண்டும்.

சொத்துவரியினை சொத்து உரிமையாளர்கள் சிரமமின்றி, செலுத்திட கீழ்காணும் வசதிகள் எற்படுத்தப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளம் www.chennaicorporation.gov.in, கைப்பேசி செயலி, வாட்ஸ்அப் சேவை (Whatsapp Service) வாயிலாக அனுப்பப்படும் Link, சொத்துவரி ரசீதுகளில் உள்ள QR Code-Scan, தலைமையிடத்தில் உள்ள தானியங்கி இயந்திரம் (காசோலை/வரையோலை வாயிலாக) வாட்ஸ்அப் சாட்பாட் (Whatsapp Chatbot) எண் 9445161913 ஆகியவற்றின் வாயிலாகவும், வரிவசூலிப்பாளர்கள் (காசோலை/வரையோலை) வாயிலாகவும், பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலகங்கள் / வார்டு அலுவலகங்களில் நேரடியாகவும் செலுத்திடலாம்.

எனவே, சொத்து உரிமையாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொத்துவரியினை உடனடியாகச் செலுத்தி அத்தியாவசிய சேவைப்பணிகளுக்கு நல் ஒத்துழைப்பு வழங்கிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**